# புறநானூற்றில் திருக்குறள் சுவடுகள்

அ.கி. செல்வகணபதி

**தோற்றுவாய்:** இன்று திருக்குறள் உலகமெல்லாம் போற்றும் உலகப் பொதுமறையாக, புதுமறையாக விளங்கி வருகிறது. சாதி, சமயங்களையெல்லாம் கடந்து உலகுக்கு ஒழுக்கு நெறி காட்டும் அறநெறி நூலாகத் திகழ்கிறது. தமிழ் இலக்கியப் பூஞ்சோலையில் நன்மணம் பரப்பும் நறுமலர், என்றும் புலராது யாணர் நாள் செல்லுகினும் நின்று அலர்ந்து தேன் பிலிற்றும் நீர்மையதாய், குன்றாத செந்தமிழ்க் கற்பகத்தின் தெய்வத் திருமலராகத் திகழ்கிறது.

அம்மலரில் நூற்று முப்பத்து மூன்று கருத்து இதழ்கள், அறம். பொருள் இன்பம் என்ற மூவகை வண்ணப் பொருளோடு விளங்குகிறது. அறிவுதேர் வாழ்கை அஞ்சிறைத் தும்பிகளாக, அறிஞர்களின் எண்ணத்தின் எழுச்சியையும் இதயத்தின் மலர்ச்சியையும், வாழ்க்கையின் இன்பத்தை நாடியும், தேடியும் திருக்குறளில் பொங்கி வழியும் அறிவுத் தேனை உண்டு மகிழ்கின்றனர். நினைக்குந்தோறும். காணுந்தோறும். பேசுந்தொறும திருக்குறளின் பேரின்பக் கடலில் மூழ்கி வலம்புரி முத்தைக் கண்டது போன்ற ஓர் உணர்வு வருகிறது. அவ்வறிவுத் தேனை உண்டவர்கள், மனிதன் மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வதற்கு வழிகாட்டும் ஒளிவிளக்காக வள்ளுவர் தந்த வான்மறை வழங்குவதைப் பலர், முறையாக எடுத்துரைத்து வருகின்றனர்.

**மனித மனம்:** தெய்வப் புலவர் திருவள்ளுவரின் திருநூல் மனித வாழ்க்கையை மையமாகக் கொண்டது. மனித வாழ்க்கை என்பது வளமுடன் வாழ்வதற்காகவே தான். வளமாக வாழ்வதற்கும், நலமாக வாழ்வதற்கும், உடல் நலத்தோடு வாழ்வது சிறப்புடையது.

"உடம்பார் அழியின் உயிரார் அழிவரன்றோ"

மனநலம் 'மன்னுயிர்க்கு ஆக்கம்' என்பது முப்பால் உணர்த்தும் முதுமொழி ஆகும். வாழ்க்கையில் வளமும், நலமும் பெறுவதற்கு தேவைப்படுவனவற்றை உறுதிப் பொருளெனவும், பேறுகள் எனவும் நம் முன்னோர் வகுத்துச் சொல்லினர். அவை தான், மனித வாழ்க்கை மதிப்புடையதாக மனிதனைத் தெய்வமாக உணர்த்தும் பேராற்றல் உடையதாகும். அப்பேராற்றலை அடைகின்றவன், கடைப் பிடிக்கின்றவ்ன, நிறைவான வாழ்க்கை வாழ்ந்தவனாகப் போற்றப்படுகிறான். இத்தகையோரைத் திருவள்ளுவர்.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்

என்று நவில்கிறார்.

திருக்குறளின் கருவி நூலாகத் திகழும் தொல்காப்பியத்தில்

இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு
அன்போடு புணர்ந்த ஐந்திணை மருங்கின் (தொல்-89)

இவருக்குப் பின் இம்முப்பெருங் கொள்கையை நன்கு போற்றி வளர்க்கப் பட்டதை அறியலாம்.

அறனும் பொருளும் இன்பமும் மூன்றும்
சிறப்புடை மரபின் பொருளும் இன்பமும்

'அறத்து வழிப்படூஉம் தோற்றம் போல' என்று புறநானூற்றுப் புலவர் கோவூர்கிழார் முப்பொருளின் பயனபாட்டையும் உணர்ந்து போற்றியுள்ளதை அறிகிறோம்.

திருக்குறள் தமிழ் மொழியில் எழுதப்பட்டாலும், தமிழர் ஒருவரால் எழுதப்பட்டிருப்பினும் தமிழ், தமிழ்நாடு என்று திருக்குறள் நூலுக்குள் எங்கும் குறிப்பிடவில்லை. ஆறு,மலை என்பவற்றைக் குறிப்பிட்டாலும், தமிழகத்தில் ஓடுகின்ற காவிரி,தென்பெண்ணை, பாலாறு, வையை, பொறுநை போன்ற ஆறுகளைப் பற்றியோ, பொதிகை மலை போன்ற மலைகளைப் பற்றியோ குறிப்பிடவில்லை. திருவள்ளுவர் கி.மு.31-ல் தோன்றியிருக்கலாம் என்றும் பாண்டியப் பேரரசில் முதலமைச்சராக திகழ்ந்திருக்கலாம் என்றும், சமயக்கணக்கர்

மதி வழி செல்லாமல், உலகெல்லாம் மக்கள் வாழ்வாங்கு வாழ வழி காட்டியவர் என்றும், அறிஞர்கள் ஆய்ந்து கூறுகின்றனர். திருவள்ளுவருக்கு பொய்யில் புலவர், முதற்பாவலர் என்ற பல பெயர்கள் உண்டு. இப்பெயர்கள் முதற்பாவலர் என்பது அவர் தமது எண்ணத்தை வெளியிட எடுத்துக் கொண்ட செய்யுளின்முதற்பாவாகிய குறள் வெண்பாவாகும். ஏழு சீர்களைக் கொண்ட குறள் வெண்பாவால் தாம் எண்ணிய எண்ணங்களை நிறுத்தி விளக்கமாகக் கூறியுள்ளார். எனவே இவருக்கு முதற்பாவில் வல்லவர் என்ற பொருள் தொனிக்குமாறு முதற்பாவலர் என்ற பெயர் ஏற்பட்டது என்பர்.

திருக்குறள் உலகச் சான்றோரால் கவரப்பட்டு, பல்வேறு மொழிகளால். மொழி பெயர்க்கப்பட்டு காலத்தால் அழியாது நிலைத்து நிற்கிறது. எல்லாச் சமயங்களும் தனது என்ற உரிமை கொண்டாடும் ஒரே நூல் திருக்குறள். லியோ டால்ஸ்ட்ராய், காந்தி அண்ணல், ஆல்பர்ட் சுவைச்சர் போன்ற அறிஞர் பொருமக்களின் வாழ்க்கைப் பாதையை திருத்தி அமைத்து மேன்மையுற வைத்தது. அதவிந்த அடிகள், "இந்திய பண்பாட்டின் அடித்தளங்கள்" என்ற நூலில் திருவள்ளுவரின் திருக்குறள் (பக்கம் 358) ஒரு நீதிநெறி கவிதை நூல் திட்டமிட்டு, சிந்தனை செய்து ஆற்றலுடன் செயற்படுத்துவதில் இதுவரை எழுந்த இவ்வகை நூல்கள் அனைத்திலும் தலைசிறந்தது என்று புகழ்ந்துரைக்கிறார். எம்.ஏரியல் என்ற அறிஞர், "திருக்குறள் தமிழ் இலக்கியத்தின் தலைசிறந்த படைப்பு. மனிதச் சிந்தனையில் மிக உயர்ந்த, மிகத் தூய்மையான வெளிப்பாடு" என்றார். டாக்டர் இரால் என்ற அறிஞர் எந்த மொழிப் மொழிப் பெயர்ப்பும், மனங்கவரும் அதன் மாண்பினை வெளிக் கொணர்ந்து விட முடியாது. அது 2ண்மையில் "வெள்ளி வேலைப்பாடு கொண்ட தங்க ஆப்பிள் கனி" என்று நவில்கிறார்.

இனி திருக்குறளையும். புறநானூற்றையும் ஒப்பாய்ந்து கூறுவதே இக்கட்டுரையின் குறிக்கோளாகும்.

திருக்குறளின் சுவடுகள் எட்டுத்தொகை நூலில் எட்டாவதாகிய புறநானூறு முழுவதும் கடவுள் வாழ்த்து முதல் நானூறு அகவற்பாக்களை புறநானூறு கொண்டுள்ளது. முதற் செய்யுளாகிய கடவுள் வாழ்த்து பாரதம் பாழய பெருந்தேவனாராலும், ஏனைய 399 பாக்களும் மரஞ்சியூர் முடி நாகராயர் முதல் கோவூர்கிழார் ஈறாக புலவர்ப்பல்ராலும் இயற்றப்பட்டுள்ளன. இவ்வரலாற்று நூலை தொகுத்தோரும், தொகுப்பித்தோரும் இன்னார் என்று இதுவரை அறிய இயலவில்லை.

இக்காலத்தில், தலைவர்களைப் புகழ்ந்து தம் வயிற்றை மட்டும் வளர்க்கும் கூட்டம் பெருகி வருவதை இன்றும் காணலாம். இக்காலத்தில் அம்முறை ஒரு கலையாக வளர்ந்து வருகிறது. அக்கலைக்கு காக்கை பிடித்தல் (கால் கை பிடித்தல்) என்ற பேசப்படுகிறது. இக்கலை பண்டைக் காலத்தில் சிறிது இருந்தது போல் தெரிகிறது. சோழன் நெய்தலங்கானல் இளஞ்சேட் சென்னியைப் பற்றி ஊன்பொதி பசுங்குடையார்பாடிய பாட்டு ஒன்று புறநானூற்றில் திகழ்கிறது. அரசே, உன்னிடம் பல காலம் பழகி உன்னைப் புகழ்ந்து பேசுவதையே தொழிலாகக் கொண்டு வழிபடுவோர் சிலர் புகழ்வதோடு மட்டும் நிற்காமல் உன்னை வயப்படுத்தக் கருதி உனக்கு மாறுபட்ட பகைவரின் பழியை எடுத்துச் சொல்வதையே தொழிலாகக் கொண்டுள்ளனர். அவர் தம் பேச்சை நம்பாதே என்று இருபெரும் கருத்துக்கறை தெளிவாக்கியுள்ளார்.

வழிபடு வோரை வல்லறி தீயே
பிறர்பழி கூறுவோர் மொழிதே றலையே (புறம் - 10)

இந்தப்பாடல்

பிறன்பழி கூறுவான் தன்பழி யள்ளுந்
திறன் தெரிந்து கூறப்படும் (குறள் - 186)

இந்தத் திருக்குறளின் சுவடாகத் திகழ்வதைக் காணலாம்.

**புறம் 18:** பாண்டியன் நெடுஞ்சொழியனை நோக்கி குடபுலவியனார் என்ற புலவர் அரசேஇ எனக்கு நீ பரிசு நல்க விரும்புவாயானால் நான் விரும்பும் பரிசைத் தருவாயாக. அது எது தெரியுமா? உன் நாட்டில் உள்ள புன்செய் நிலங்களை எல்லாம் நன்செய்களாக மாற்ற வேண்டும். அந்த புன்செய்களுக்குத் தண்ணீர் வேண்டுமல்லவா? மேடான இடத்தில் குளங்களைத் தோண்டிஇ கண்மாய்களைத் திறந்து வாய்க்கால் வழியாக வயல்களுக்கு நீர் பாய்ச்சுவாயானால் அதுவே நான் பெறும் பரிசு என்று சொன்னார். அவ்வாறு அமையுமானால், பசியும், பிணியும், பகையும் இல்லாமல் நாடு வளந்தரும் நாடாக அமையும். புலவர் பேசிய பெருமிதம் இக்காலத்து ஆட்சி நடத்துவோர் செய்வார்களானால் நாடும் நலம் பெறும். மக்களும் மாண்புறுவர். மனித நேயமும் சிறக்கும் என்பத உறுதி.

"முழங்கு முந்நீர் முழுவதும் விளை இப்" என்ற பாடலில்
"நலனெளி மருங்கிய னீர்நிலைபெருகத்
தட்டோரம்ம விவட்டட் டீடாரே"
வானோக்கி வாழும் உலகெல்லாம் மன்னவன்
கோல்நோக்கி வாழும் குடி
நீர்இன்று அமையாது உலகெனின் யார்யார்க்கும்
வான்இன்று அமையாது ஒழுக்கு

ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் புலவர்களின் தலைவராக விளங்கிய வெள்ளைக்குடி நாகனார் என்ற புலவர் வரிகொடா இயக்கத்தைத் தொடங்கினார். சோழன் குளமுற்றுத்துத் துஞ்சிய கிள்ளி வளவன் சில காலம் தன் ஆட்சிப் பொறுப்பை அதிகாரியிடம் கொடுத்தான். அந்த அதிகாரிகள்.

வேலொடு நின்றான் இடுஎன் றது போலும்
கோலொடு நின்றான் இரவு (குறள் 552)

என்ற திருக்கறளக்கு எடுத்துக்காட்டாகத் திகழ்ந்தனர். பல ஆண்டுகள் மழை பெய்யாமையால் காவிரி ஆற்றின் கடைக்கோடியில் உள்ள வெள்ளைக்கடி விவசாயிகள் அரசுக்கு வரி கொடுக்காமல் மறுத்தனர். அதிகாரிகள் இளவுப் பறை அறிவித்து வீடுகளை ஏலத்தில் கொண்டு வந்தனர். இதனைப் பொறுக்க மாட்டாத நாகனார் என்ற புலவர் அரசனிடம் சென்று, அரசே, நீ விரித்துப் பிடித்திருக்கின்ற வெண்கொற்றக்கொடை வெயிலை மறைப்பதற்காகவோ, மழையைத் தடுப்பதற்காகவோ பிடித்திருக்கிறாய் என்ற கருத்தை அறிவித்தார். அவர் பாடிய பாடல்.

"நளியிருமுந்நீர் ஏணியாக என்ற புறநானூற்றுப் பாடலில்
கண்பொர விளங்குநின் விண்பொரு வியன்குடை
வெயில் மறை கொண்டன்றோ அன்றே வருந்திய
குடிமறைப் பதுவே கூர்வேல் வளவ" (புறம் 35)
என்று கூறி அரசனுக்கு அஞ்சாது அறிரை கூறினார். இவர் பாடிய பாடல்,

அஞ்சுவது அஞ்சாமை பேதைமை அஞ்சுவது
அஞ்சல் அறிவார் தொழில்
முறைகோடி மன்னவன் செய்யின் உறைகோடி
ஒல்லாது வானம் பெயல் (குறள் 559)

இக்குறள்பாக்கள் புறநானூற்றின் சுவாடாகத் திகழ்கின்றன.

பாண்டியன் இலவந்திகைப் பள்ளி துஞ்சிய நன்மாறனை மதுரை மருதன் இள நாகனார் பாடிய "ஓங்குமலை பெருவிற்" – என்ற பாடலில்

**புறம் 55**:
கடுஞ்சினத்த கொல்களிங் கதழ்பரிய கலிமாவும்
நெடுங்கொடிய நிமிர்தேரு நெஞ்சுடைய புகன்மறவரும்
நான்குடன் மாண்ட தாயினு மாண்ட

அறநெறி முதற்றே யரசின் கொற்றம்"
என்று கூறுகிறார். அதாவது கடின சினத்தை யுடைவாகிய கொல்களிலும் விரைந்த செலவையுடையவாகிய மனம்செருக்கிய குதிரையும், நெடிய கொடியையுடையவாகிய உயர்ந்த தேரும் நெஞ்சுவலியையுடைய போரை விரும்பும் மறவருமென நான்கு படையுங்கூட மாட்சிமைப்படடதாயினும், மாட்சிமைப்பட்ட அறநெறியை முதலாக 2டைத்து வேந்தரது வெற்றி (என்ற பாடலில்)

அளனிழுக்கா தல்லவை நீக்கி மறனிழுக்கா
மானமுடை யது அரசு – 384
வேலன்று வென்றி தருவது மன்னவன்
கோலதூஉம் கோடா தெனின் - 546 என்ற குறட்பாக்களின்

சுவடாகத் தெரிகிறது.

**புறம் 73:** சோழன் நலங்கிள்ளி பாடிய
"தெல்ல வந்தென் னல்லடி பொருந்தி" – என்ற பாடலில்

"அவன் வருந்தப் பொரேஎ னாயிற் பொருந்திய
தீதி னெஞ்சத்துக் காதல் கொள்ளாப்
பல்லிருங் கூந்தன் மகளிர்
ஒல்லா முயக்கிடைக் குழைகவென் றாரே"

அவ்விடத்து வருந்தும்படி பொருந்திலேனாயின், கூடிய தீதில்லாத நெங்சத்தாற் காதல் கொள்ளாத பல வகைப்பட கரிய கூந்தலையுடைய பொதுப் பெண்டிரது பொருந்தாத புணர்ச்சியிடை என் மாலை துவள்வதாக – என்ற பாடல்

அன்பின் விழையார் பொருள்விழையம் ஆள்தொடியார்
இன்சொல் இழுக்கு தரும் 911 என்ற குறட்பாவின் சுவடாகத் தெரிகிறது.

**புறம் 74**: சேரமான் கணைக்கால் இரும்பொறை சோழன் செங்கண்ணானோடு திருப்போர்ப் புறத்து பொருது பற்றிக் கோட்பட்டுக் குடவாயிற் கோட்டத்துச் சிறையில் கிடந்து தண்ணீர் தாவென்று பெறாது மீண்டும் பற்றிக்கைக் கொண்டிருந்து உண்ணாமல் சொல்லித் துஞ்சிய பாட்டு.

"குழவி இறப்பினும்" – என்ற பாடலில்

பிள்ளை இறந்துப்பிறப்பினும் தசைத்தடியாகிய பிண்டம் பிறப்பினும் அவற்றை ஆளல்லவென்று கருதாது வாளோச்சுதலில் தவறார் அரசராயிருக்க, பகைவர் வாளாற் படாதுஇ சங்கிலியால் பிணிக்கப்பட்ட நாய்போலப் பிணித்துத் துன்பத்தைச் செய்து இருத்திய கேளல்லாத கேளிருடைய உபகாரத்தான் வந்த தண்ணீரை இரந்துண்ணக் கடவே மல்லேமென்னும் மனவலியின்றி வயிற்றின். தீமையாற்ற வேண்டித் தாமே இரந்துண்ணும் அளவினையுடையாரை அவ்வரசர் பெறுவார்களோ இவ்வகலத்தின் கண்.

"குழவி இறப்பினும்" – எனும் பாடலில் கூறுகிறார்

மருந்தோமற்று ஊன்ஓம்பும் வாழ்க்கை பெருந்தகைமை
பீடழிய வந்த இடத்து - 968
மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்
உயிர் நீப்பர் மானம் வரின் - 969
இளிவரின் வாழாத மானம் உடையார்
ஒளிதொழுது ஏத்தும் உலகு - 970
அளனிழுக்கா தல்லவை நீக்கி மறனிழுக்கா
மானம் உடைய தரசு - 384

என்ற குறட்பாக்களின் சுவாடாத் தெரிகறது.

**புறம் 95:** அதியமான் நெடுமாங்ச ஔவையாரை தெண்டைமானிடத்து தூது சென்ற போது தொண்டை மானின் படைக் கலத்தைப் பார்த்துப்பாடியது:

“இவ்வே பிலி அணிந்து” என்ற பாடலில் (இப்படைக் கலத்தில் உள்ள வாள், வேல் முதலியன மயில் பீலி அணியப்பட்டு மாலையைச சூட்டப்பட்டு உடலிடம் திரண்ட வலிய காம்பை அழகுபடச் செய்யப்பட்டு. நெய்யிடப்பட்டுக் காவலையுடைய அகன்ற கோயிலிடத்தன. செல்வமுண்டாயின் உணவு கொடுத்து இல்லையாயின் உள்ளதனைப பலரோடு கூடவுண்ணும் வறியோருடைய சுற்றத்திற்குத் தலைவனாகிய தலைமையுடைய எம் வேந்தனுடைய கூரிய நுனியையுடைய வேல். அவைதாம் பகைவரைக் குத்துதலாற் கங்கும் நுனியும், முரிந்து கொல்லனது பணிக்களரியாகிய (வேலை செய்யும் கொட்டிலாகய) குறிய கொட்டிலிடத்தன வாயின எந்நாளும்.

இறுதி பயப்பினும் எஞ்சாது இறைவற்கு
உறுதி பயப்பதாம் தூது-690 என்ற குறளின் சுவாடாகத் தெரிகிறது.

**புறம் 107:** வேள் பாரியை கபிலர் “பாரி, பாரி என்று பலவேத்தி” – என்ற பாடலில் பாரி பாரியென்று சொல்லி அவன் பல புகழையும் வாழ்த்தி அவ்வொருவனையே புகழ்வர். செவ்விய நாவையுடைய அறிவுடையோர்: பாரியாகிய ஒருவனுமேயல்ரன். இவ்விடத்து உலகத்தைப் பாதுகாத்தற்கு மாரியுமுண்டு என்று பாடியுள்ளார்.

கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்டு
என்ஆற்றுங் கொல்லோஉலகு – 211

என்ற குறளின் சுவடாகத் தெரிகிறது.

**புறம் 117:** வேள் பாரியை கபிலர் பாடிய பாடலில்

மைம்மீன் புகையினும் - எனும் பாடலில்
“மனைத்தலை மகவை யீன்ற வமர்க்கண்
ஆமா நெடுநீரை நன்பு லாரக்
கோஒல் செம்மையிற் சான்றோர் பல்கிப்
பெயல்பிழைப் பறியாப் புன்புலத் ததுவே”

(மனையிடத்து குழவியையீன்றி மேவிய கண்ணையுடைய ஆமாவினது நெடியநீரை நல்ல புல்லை மேயக் கோல் செவ்விதாகலின் அமைந்தோர் பலராக மழை பிழைப் பறியாத புல்லிய நிலத்தின் கண்ணாது, பாரி மகளிருடைய தந்தை நாடு)

முறைகோடி மன்னவன் செய்யின் உறைகோடி
ஒல்லாது வானம் பெயல் - 559 என்ற குறளின் சுவடாகத் தெரிகிறது.

**புறம் 23:** வாழ்கை என்பது எண்ணத்தால் அமைவது. நல்லெண்ணத்தால் வளர்வது. நல்லனவற்றை எண்ணிய எண்ணியாங்கு எய்துபவர் என்றும் கூறுவர். இதனைப் புறநானூற்றுப் புலவர்களுள் ஒருவர் கல்லாடனார், பாண்டியன், தலையானங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனைப் பற்றி ஒரு பாடல் பாடுகிறார். அப்பாடல் புறநானூற்றில் உள்ளது.

‘............
ஆலங் கானத் தமர்கடந்தட்ட
கால முன்பநிற் கண்டனன் வருவல்
அறுமருப் பெழிற்கலை புலிபாற் பட்டெனச்
சிறுமறி தழீஇய தெறிநடை மடப்பிணை
பூளை நீடிய வெருவரு பறந்தலை
வேளை வெண்பூக் கறிக்கும்
ஆளில் அத்தம் ஆகிய காடே’ (புறம் 23)

என்ற பாடலில் தான் வந்த காட்டு வழியைப் பற்றிப் பாடுகிறார். ஒரு ஆண்மான். ஒரு பெண் மான். ஒரு மான்குட்டி, ஒரு குடும்பம், ஒரு புலி, ஆண் மானைக் கொன்று விடுகிறது. தன் கணவரோடு இறக்க நினைத்த பெண்மான் இறக்கவில்லை. தன் குட்டியைக் காக்கவே உயிர் வாழ்கிறது. சுவையுடைய

பசும்புற்களைத் தின்னாமல் ஏதோ உயிர் வாழ வேண்டும் என்பதற்காக கொஞ்சம் சத்துடைய வேளைப் பூவைத் தின்கிறது. இங்ஙனம் கணவனை இழந்து குட்டியைக் காப்பதற்காக வேளைப் பூவைத் திறனும் பெண் மானின் இல்லறக் கடமையை நினைவூட்டுகிறார் கல்லாடனார்.

இவ்வாறு புறநானூற்றுக் கருத்து கணவனை இழந்த பின்னும் கைம்மை நோன்பு உடைய மனைவியர் சாகாதிருப்பர் என்ற சமுதாயக் கருத்தினைப் புலவர் கூறுகிறார். இது திருக்குறள் அறத்தோடு கூடிய புறநானூற்றின் கருத்துக்களாகம்.

விளியும், இன்னுயிர் வேறல்ல என்பார்

அளியின்மை ஆற்ற நினைந்து –(1209)

பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னும்

திண்மை யுண்டாகப் பெறின் -(54)

மேற்கண்ட குறட்பாக்கள் புறநானூற்றின் சுவடுகளாகத் தெரிகின்றன. இன்னும் எத்தனையோ திருக்குறட்பாக்கள் புறநானூற்றின் சுவடுகளாக உள்ளன.

**புறம் 183**: பாண்டியன் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் பாடிய பாடல்

'உற்றுழி யுதவியு முறுபொருள் கொடுத்தும்

பிற்றைநிலை முனியாது கற்ற னன்றே – என்ற பாடலில்

தம் ஆசிரிருக்கு ஒரு துன்பம் வந்தவிடத்து அத்துன்பத்தைத் தீர்ப்பதற்காக உடனே வந்து உதவி செய்தும் மகுந்த பொருளைக் கொடுத்தும், வணங்கி வழிபடும் நிலைமையை வெறுக்காது ஒருவனுக்கு அழகாகும். இப்பாடல்

"உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றுங் கற்றார்

கடையரே கல்லாதேவர் - 395 என்ற குறளின் சுவாடாகத் தெரிகிறது.

**புறம் 186**: மோசிக்கிரனார் பாடியது

"நெல்லும் உயிரன்றே, நீரும் உயிரன்றே"- என்ற பாடலில் உயிரைக் காக்கும் நெல்லும், நீரும் இருப்பது மன்னன் முறை செய்து காப்பான் என்ற கருத்திற்கு

இயல்புளிக் கோலோச்சும் மன்னவன் நாட்ட

பெயலும் விளையுளும் தொக்கு -545

என்ற குறளின் சுவாடாகத் தெரிகிறது.

**புறம் 188**: அறிவுடை நம்பி என்ற பாண்டியன்

"படைப்புப் பல படைத்துப் பலரோடு உண்ணும்

உடைப்பெரும் செல்வராயினும் இடைப்படக்

குறுகுறு நசந்து சிறுகை நிட்டி

இட்டும் தொட்டும் கவ்வியும் துழந்தும்

நெய்யுடை அடிசில் மெய்பட விதிர்த்தும்

மயக்குறு மக்களை இல்லோர்க்குப்

பயக்குறை இல்லைத்தாம் வாழும் நாளே"

என்று பாடியுள்ளார்.

இப்பாடலின் அடிப்படைக் கருத்து திருக்குறளின் உள்ளது.

அமிழ்தினும் ஆற்ற இனிதே தம்மக்கள்

சிறுகை அளாவிய கூழ் குறள் 64

மக்கள்மெய் தீண்டல் உடற்கின்பம் மற்றுஅவர்

சொற்கேட்டல் இன்பம் செவிக்கு குறள் 65

என்று திருக்குறளின் இருப்பதைக் காணலாம். பாண்டியன் அறிவுடை நம்பி பாடிய புறநானூற்றுப் பாடலைப் படிக்கும் போது நமக்கு இன்பம் துளும்புகிறது.

பெற்ற தாய்க்கும், தந்தைக்கும் தம்முடைய பிள்ளைகள் வஞ்சனை அறியாத பருவத்தில் தம் பிஞ்சுக் கரங்களால் தாம் உண்ணும் கலத்துள் கரங்களால் தொட்டு, கவ்வி வாயில் உடம்பெல்லாம் சிதறிய பொழுதிலும் அவ்வுணவு தேவாமிர்தத்தைக் காட்டிலும் இனிய சுவையை உடையது என்பார்கள். இந்தத்

திருக்குறளைப் பாண்டியன் எத்தனை முறை சுவைத்து, சுவைத்துப் படித்தானோ அந்தப் பாடல் சுவையே நாம் புறநானூற்று பாடல் மூலம் அறிய முடிகறது.

**புறம் 216** : கோப்பெருஞ்சோழன் சாவை விரும்பி வடக்கிருந்தான். அவனுடைய நண்பரான பிசிராந்தையார் என்ற புலவர்க்கும் தன்னருகே வடக்கிருக்க இடம் ஒதுக்குமாறு கூறினான். அப்போது சான்றோர் அதனை ஏற் காதது போல்

"தன்பெயர் கிளக்கும் காலை என்பெயர்
பேதைச் சோழன் என்னும் சிறந்த
காதற் கிழமையும் உடையன் அதன்றலை
இன்னதோர் காலை நில்லலன்
இன்னே வருகுவன் ஒழிக்க அவற்கு இடமே"

அவன் பெயரையே "சோழன்" என்று கூறிக்கொள்ளுமளவு பேரன்பு உடையவன். இவ்வாறு நான் துயர் கொண்ட காலத்திலே வராது அங்கே நிற்கவே மாட்டான். இப்போழுது வருவான். அவனுக்கும் என்னுடன் இருக்க இடம் ஒதுக்குங்கள்.

"புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்
நட்பாம் கிழமை தரும் - 785

என்ற குறளின் சுவடாகத் தெரிகிறது.

**புறம் 266:** சோழன் உருவப் ப∴றேர் இளஞ்சேட் சென்னியைப் பெருங்குன்றூர் கிழார் பாடிய! 'பயங்கெழு – மாமழை பெய்யாது மாறி" என்ற பாடல்

"உள்ளியவிருந்துகண்டு ஒளிக்கும் திருந்தா வாழ்கைப்
பொறிப்புணர் உடம்பில் - தோன்றிஎன்
அறிவுகெட நின்ற நல்கூர் மையே"

வலிய குதிரையையுடைய சென்னியை! அறிவுடையோர் அவையிலே அ∴தற்றான் ஒருவன் சென்று "யானுற்ற துயருக்கு நீரே துணை" என்ன, அவர் விரைந்து அவன் துயரினைத் தீர்ப்பாரன்றே! ஐம்பொறியும் குறைவற்ற என் நல்லுடலுடன் தோன்றி உடலினால் ஆகும் பயன் கொள்ளாதவாறு தடுக்கிறதே வறுமை! விருந்திமரைக் காண அவர்க்கு விருந்தூட்ட வகையற்று ஒளித்து வாழ்கின்றேன். என அறிவும் கெட என்பால் நிலைத்துவிட்ட வறுமையை நீ போக்கி அருளாயோ?

"அற்றார் அழிபசி தீர்த்தல் அ∴தொருவன்
பெற்றான் பொருள்வைப் புழி -226
பொச்சாப்புக் கொல்லும் புகழை அறிவினை
நிச்ச நிரப்புக் கொன் றாங்கு -532
தொல்வரவும் தோலும் கெடுக்கும் தொகையாக
நல்குரவு என்னும் நசை – 104 என்ற குறள்களின் சுவாடாகத் தெரிகிறது.
பெருக்கத்து வேண்டும் பணிதல் சிறிய
கருக்கத்து வேண்டும் உயர்வு **குறள் 963**
என்ற குறளுக்கு எடுத்துக்காட்டாகத் தெரிகிறது.

**புறம் 20:**

கருவுற்று வயாவுற்ற பெண்களே கட்டிமண், சம்பல் போன்ற மண்ணாசை கொள்ளலாமே தவிர மண்ணாசை கொண்டு பிறர் நாட்டைப பிடிக்க வேண்டும் என்றும் மக்களை வருத்தக்கூடாது என்றும், குறுங்கோழியூர் கிழார் விரும்பினார். அவர் பாடிய பாடல் புறநானூற்றிலே மிளிர்கிறது.

"வயவுறு மகளிர் வேண்டுணின் அல்லது
பகைவர் உண்ணார் அருமண்ணினைளே" புறம் 20
"அடுதீ அல்லது சுடுதீ அறியாது

இருமருந்து விளைக்கும் நன்னாட்டும் பெருநன்" புறம் 70

இப்பாடல் அறத்துப் பாலில் தெளிவாகத் தெரிகிறது. உலகம் வாழ வேண்டும் என்னும் பரந்த நோக்கமாகிய அருள் ஒரு குழந்தை. தொடர்புடையாரிடத்துத் தோன்றும் அன்பு அதன் தாய், அத்தகைய அன்பு அறத்தின் அடிப்படையில் இல்வாழ்கை நெறியில் வாழ்கைத் துணைநலம் அமைந்து, மக்கட்பேறு வாய்த்த பின்னரே படிப்படியாக வளர்ந்து அருளாய் மாறியிருக்கிறது என்பது திருவள்ளுவரின் கொள்கை. அருள்நெறிக்கு வழியாய் அன்பு. வாழ்கைக்கு அடிப்படையாய் அமைந்த இல்வாழ்க்கை. உண்மையாகவே சிறந்து விளங்க வேண்டுமானால் நாட்டிலே நல்ல ஆட்சி அமைய வேண்டும். சுற்றுப் புறத்தின் தீய அமைப்புத்தான் பல தல்லவர்களின் குடும்பங்களையும் பாழாக்குகிறது. எடுத்துக்காட்டாக சங்க காலத்தில் நாட்டை ஆளம் ஒரு வள்ளலின் இல்வாழ்க்கையைக் கூறலாம். அவர் தன்னுடைய வாழ்க்கையையே விற்க முயன்ற ஓர் ஒப்புரவாளர்.

"நாத்தம் போல் கேடும் உளதாகும் சாக்காடும் பெற்ற வித்தகர்", மயில் ஆடி அகவியதைக் கேட்டு குளிரால் நடுங்கியதாக எண்ணி தம் பட்டுப் போர்வையை அதற்குக் கொடுத்தார். அவர் பெயர் பேகன் என்னும் வள்ளல். பேகனின் வள்ளல் தன்மையைப் புகழ்ந்த பரணர், 'எவ்வளவு கொடுக்க முடியமோ அவ்வளவு ஈதல் நல்லது' என்பது பேன் கோட்பாடு. அவர் வள்ளல் தன்மையே, 'மறுமை நோக்கியது அல்ல. பிறர் வறுமையை நோக்கியது' என்கிறார்.

புறம் 141: "பாணன் சூடிய பசும்பொன் தாமரை" என்ற பாடலில்

"உடாஅ போரா ஆகுதல் அறிந்தும்
பாடாஅ மஞ்ஞைக்கு ஈத்த எங்கோ
கடா யானை கலிமான்பேக" என்றார்.

பிற வறுமையை நோக்கியது அவன் கைவண்மையே, இத்தகைய சிறப்பான வாழ்வு வாழ்ந்த பேகினடம் ஒரு குறை ஏற்பட்டது. அது அவனுக்கு இல்வாழ்க்கைக்கு இழுக்குத் தரும் குறையாய் இருந்தது. இதனை அறிந்த கபிலர் பரணர், அரிசில் கிழார், பெருங்குன்றூர் கிழார் போன்றவர்கள் வருந்தினர். கேனிடம் சென்று தன் மனத்துன்பத்தை எடுத்துரைத்தனர்.

மனத்துயர்க்கு காரணம் வறுமையோ, பரிசில் கொடுக்கவில்லை என்ற கவலையோ இல்லை. "பசித்தும் வாரே பாரமும் இலமே" (புறம்-145) எனப் பரணர் பாடியது, "அன்ன ஆகநின் அருங்கல வெறுக்கை அவை பெறல் வேண்டே அடுப்போர்ப் பேக" (புறம்-146) என அரிசில் கிழார் அறிவுறுத்தியதும் காணலாம். பேகன் தன் வாழ்க்கைத் துணைவி வருந்துமாறு பிறர் ஒருத்தியோடு வாழ்வான் ஆனான். அவனுடைய வாழ்க்கைத துணைவியின் பெயர் கண்ணகி. அவள் கண்ணீர் விட்டு நைந்து வருந்தினாள்.

எனவே புலவர்கள் பேகனிடம் சென்று தங்கள் மனத்துயரை எடுத்துக் கூறினார். அவர் கூறியது, யான் பாடியது உன்னையும் உன் மலையையும் பாடினேன் அதைக் கேட்டு அழுதாள். அவள் உள்ளம் அழிந்து உடல் மெலிந்து அழுதபோது குழல் இசைப்பது போல் அழுதாள் என்று கூறுகிறார்.

இக்கண்ணகி காரணமாக பரணர் இரண்டு பாடல்களைப் பாடியுள்ளார். "அருளாள, நீ அருளை மறந்தது கொடுமை என்றார். உன் அரண்மனை சென்றேன். அவள் அழுகையைக் கண்டேன். அம்மா, நீ என் நண்பன் பேகனுக்கு உறவோ? என்று தொழுது வினவினோம். அந்த, அம்மை கண்ணீரைத் துடைத்துக் கொண்டு நான் அவனுக்கு உறவு அல்லேன். அவன் வேறு ஒருத்தியின் அழகை விரும்பி வாழ்ந்து வருகிறான் என்றாள். இப்பொழுதே தேர் ஏறி உன் மனைவியின் துயரைக்களைந்து அருள்க. இதுவே உன்னிடம்

வேண்டும் பரிசு என்றார். அரிசில் கிழார் என்ற புலவர், நான் வேண்டுவது நீ வழங்கும் பரிசில் அல்ல. கண்ணகியின் துயரை நீக்கி அன்பு செலுத்துவதே யான் வேண்டும் பரிசு என்றார்.

பெருங்குன்றூர் கிழார் என்ற புலவர் "ஆவியர் கோவே உன் மனைவியின் கூந்தல் எண்ணெய் தேய்க்காமல் பல நாளாயினும் அவள் புதுமலர் சூடுதற்கு அருள் கொண்டு உன் வீட்டிற்குத் திரும்பிச் செல். அதுவே நான் வேண்டும் பரிசு என்று பாடினார். (அப்பாடல் புறநானூற்றில் 147 பாடலாக விளங்குகிறது)

இவ்வாறு நாட்டை ஆளும் தலைவரைக் கடிந்து கூறும் அளவிற்குப் பண்டைக்காலப் புலவர்கள் வாழ்ந்தார்கள். இக்காலத்தில் தலைவர்களின் புறவாழ்க்கையில் ஏற்பட்ட குறைகளை ஒரு சிலர் பயன் கருதாமல் கடிகின்றனர். அவர்களது அக வாழ்க்கையில் ஏற்படும் குறைகளைக் கூறித் திருத்த வல்லார் இக்காலத்தில் யார் இருக்கிறார்கள்?

**தொகுப்புரை:** அரை என்பது திருக்குறளை குறிக்கிறது என்பதைப்புறநானூற்றுப் புலவர்கள் கூறியதைக் கண்டோம்.

அறம் என்பது நாம் கூறும் தர்மம் என்ற பொருளில் வழங்கவில்லை திருவள்ளுவர், யாசகம் கேட்கும் பிச்சைக்காரன் தர்மம் போடுங்கள் என்கிறான். அறஞ்சாரா நல்குரவு (1047) அறம் நோக்காது ஈட்டிய ஒண்பொருள் (1009) அறங்கூறான் அல்ல செயினும் (181) அறன் ஈனும் இன்பமும் ஈனும் (754) அறவாழி (8) அறவினை யாதெனின் (321) அறத்தாறு (37) என அறச் சொ்லலாட்சி குறளில் மலிந்துள. இதன் வரம்பான பொருள் யாது?

"மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்

ஆகுல நீர பிற"

அறன் வலியுறுத்தல் என்ற அதிகாரத்துள் வந்துள்ளது. தன் மனத்தினிடத்து மாசல்லாத அந்த அளவே அறம் என்று விடை கூறினார் வள்ளுவர். அறம் என்பதன் பொருள் எவரும் எளிதில் உணரக்கூடியதே என்பதை மனத்துக்கண் மாசிலன் ஆதல் என்றார். அறத்தினின்று தோன்றுகிற செயல்கள் பல உள அறத்தின் புறநிலைகள் எவ்வாறு இருப்பினும் அடிப்படை மனமும், அடிப்படை நினைவும் தூய்மையாக இருக்க வேண்டும்.

"மனத்தது மாசாக மாண்டார் நீராடி

மறைந்தொழுகு மாந்தர் பலர்" (278)

"மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்

பழித்தது ஒழித்து விடின்"

மனத்தில் மாசு உடைய ஒருவர் எது செய்தாலும் அறமில்லை. வஞ்சகமே என்பது மேற்காட்டிய இரு குறள்களின் கருத்தாகும். அறச்சொற்களுக்குப்பொருள் வரம்பு செய்தாற் போலப்பல குறட்பாக்களைக்குறிப்பிடுகிறார்.

வாழ்க குறள் வளம் வளர்க புறநானூற்றுக்குறள் சுவடுகள்